1975 மார்ச் 27]

பத்தாண்டு காலப் பணி அடிப்படையில் தேர்வு நிலைப்பதவி அளிக்க ஆணையிடப்பட்டது. அதன்படி பி. டி. ஆசிரியர்களுக்கும் முதல்நிலைத் தமிழாசிரியர்களுக்கும் தேர்வுநிலை அளிக்கப்பட்டது. தேர்வு நிலை அளிக்கப்பட வேண்டிய, வினவில் குறிப்பிட்டுள்ள, சிறப்புப் பிரிவு ஆசிரியர்களுக்கும் தேர்வுநிலை கொடுப்பதை தெளிவாக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

Grade-I Ex-Hindi Pandits

*192 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of Thiru K. S. Ganapathi) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) the number of Grade-I Ex-Hindi Pandits in the Revenue District of Tiruchirappalli, working in 'B' Wing Schools, who have passed the Pulavar Examination of the Madras University and working as Secondary Grade Teachers, without being absorbed as Grade-I Tamil Pandits; and

(*b*) the reason therefor ?

முன்னாள் முதல்நிலை ஹிந்தி ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சிராப்பள்ளி ரெவின்யூ மாவட்டத்தில் உள்ள "பி" பிரிவு பள்ளிகளில் பணியாற்றும் முன்னாள் முதல்நிலை ஹிந்தி ஆசிரியர்களில் எத்தனை பேர் சென்னைப் பல்கலைக் கழகப் புலவர் தேர்வில் தேறி செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தும் முதல்நிலைத் தமிழ்ப் பண்டிதர்களாக நியமிக்கப்படவில்லை ?

(இ) அதற்கான காரணங்கள் யாவை ? -

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஒருவர் தான்.

(இ) இரு மொழிக் கொள்கையைக் கடைப் பிடித்ததன் காரணமாக முன்னாள் ஹிந்தி மற்றும் இதர மொழிப் பண்டிதர்களும் அன்றைய தினத்தில் அவர் அவர்களது பொதுக் கல்வித்தகுதிகளைப் பொறுத்து ஆசிரியரல்லாத பதவிகளிலோ அல்லது நடுநிலை, இடைநிலை மற்றும் பி. டி.. ஆசிரியர்களாகவோ நியமிக்கப்பட்டனர். அவர்கள் எந்தப் பதவியிலிருந்தாலும் அவர்களது ஊதியத்திற்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. குறிப்பிட்ட ஆசிரியருக்கு மாற்றுப் பதவி அளிக்கும் பொழுது முதனிலை தமிழ்ப் பண்டிதராவதற்கு தகுதி பெற்றிருக்கவில்லை யாதலால் முதனிலை தமிழ்ப் பண்டிதராக எடுத்துக் கொள்ளப்படவில்லை.